# செய்தி வெளியீடு

## ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் திருப்பணி துவக்க விழா

பூலோக வைகுண்டம் என்று அழைக்கப்படும் ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் பன்னிரு ஆழ்வார்களால் பாடல்பெற்ற 108 வைணவ திவ்ய தேசங்களில் முதன்மை படைத்ததாக விளங்கி வருகின்றது. இச்சிறப்புமிகு திருக்கோயில் திருவண்ணாழி திருச்சுற்று, ராஜ மகேந்திரன் திருச்சுற்று, குலசேகரன் திருச்சுற்று, ஆலிநாடான் திருச்சுற்று, அகளங்கன் திருச்சுற்று, திருவிக்ரமன் திருச்சுற்று, கலியுக ராமன் திருச்சுற்று என ஏழு பிரகாரங்களை உள்ளடக்கி 21 கோபுரங்களுடன் 156 ஏக்கர் பரப்பளவில் காவிரி நதிக்கரையில் அமைந்துள்ளது.

தொன்மை வாய்ந்த சிற்ப வடிவமைப்புகளையும், வழிபாட்டு முறைகளையும், விழாக்களையும் உள்ளடக்கி, தொன்மைக்கும் பழக்க வழக்கங்களுக்கும் இலக்கணமாய்த் திகழ்ந்து வருவதோடு மட்டுமல்லாமல் தமிழர்களின் கலாச்சார கருவூலமாக இத்திருக்கோயில் விளங்குகின்றது.

நான்கு வேதப் பொருட்களுக்கு நல்விளக்கம் பாடிய ஆழ்வார்கள் மட்டுமின்றி, வைணவத்தை விஷிஷ்டாத்வைதம் எனும் தனிப்பெயரில் உலகிற்கு விவரித்த இராமானுஜர் இத்திருக்கோயில் வளாகத்தில் தானான திருமேனியாக இருந்து அருள்பாலிப்பது இத்திருத்தலத்திற்கு மிகுந்த பெருமை சேர்க்கின்றது.

“செங்கோலுடைய திருவரங்கச் செல்வனார்” என்று ஆண்டாள் நாச்சியார் மங்களாசாசனம் செய்தபடி, என்றும் நீங்காத செங்கோலும், களையப்படாத கஸ்தூரி திலகமும், பரமபதநாதனின் கௌஸ்துபம் போன்ற திருமார்பில் விளங்கும் ஒப்புயர்வற்ற அற்புத நீலநாயகமும் இறைவனுக்கு சிறப்பாக அமைந்துள்ளன. இத்திருக்கோயில், தலம், தீர்த்தம், மூர்த்தி ஆகிய மூன்றிற்கும் சிறப்பு பெற்று விளங்குகின்றது.

இத்தகைய பெருமைகளையுடைய ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலுக்கு 2001–ஆம் ஆண்டு மகா சம்ரோக்ஷணம் செய்யப்பட்டது. மகா சம்ரோக்ஷணம் செய்து பனிரண்டு ஆண்டுகள் நிறைவுற்ற நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது ஆணையின்படி, மீண்டும் மகா சம்ரோக்ஷணம் செய்ய ஏதுவாக இத்திருக்கோயில் திருப்பணிகளை சுமார் 10 கோடியே 45 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விரைவில் நிறைவுடன் செய்து முடிக்க உத்தேசிக்கப்பட்டு உள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது ஆணையின்படி, இத்திருக்கோயில் திருப்பணிகள் 2014–ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5–ஆம் நாள் வியாழக் கிழமை காலை 7.30 மணி முதல் 8.30 மணிக்குள் ஆயிரங்கால் மண்டபத்தில் ஸ்ரீ மகா சுதர்சன ஹோமத்துடன் தொடங்கப்பட உள்ளன.

இத்திருப்பணி துவக்க விழாவில் பொதுமக்களும் பக்தகோடிகளும் கலந்துகொண்டு சிறப்பிப்பதோடு இப்பூலோக வைகுண்டத்தில் அமைந்துள்ள திருவரங்கப்பெருமானின் அருள்பெறவும் அன்போடு அழைக்கப்படுகிறார்கள்.

ப. தனபால்
ஆணையர்,
இந்து சமய அறநிலையத் துறை

வெளியீடு : இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
நாள் : 1.6.2014